மீனவ மக்களின் கதறல் சத்தம் கேட்கவில்லையா?

விஜய்யின் போலித்தனத்திற்கு காலம் நிச்சயம் பாடம் கற்பிக்கும்!

தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

சென்னை, நவ. 7-

புயல் சீற்றத்தில் சிக்கி உயிரிழந்த காசிமேடு மீனவர்களின் குடும்பத்திற்கு நேரில் ஆறுதல்கூட தெரிவிக்காத முதலமைச்சர் விஜய், நடிகை திரிஷாவுடன் ஆடம்பர கல்யாணத்தில் பங்கேற்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. கடலில் எங்கள் உயிர் போய்க் கொண்டிருக்கும்போது, கல்யாண வீட்டில் நீங்கள் சிரித்துக் கொண்டிருக்கிறீர்களே? என மீனவர்கள் ஆவேசமாக கேள்வி எழுப்புகின்றனர்.

நடுக்கடலில் முரசு புயல் சீற்றத்தில் சிக்கி காசிமேடு மீனவர்கள் 9 பேர் உயிரிழந்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. தங்கள் சொந்தங்களின் உயிரை பறிகொடுத்து, வாழ்வாதாரத்தை இழந்து, காசிமேடு மீனவ மக்கள் வேதனையில் பரிதவித்து வருகின்றனர். படகு உடைந்து, வலைகள் அறுந்து, கடனில் மூழ்கி, அடுத்த வேளை உணவுக்கே வழியில்லாமல் கதறிக் கொண்டிருக்கிறார்கள் காசிமேடு மீனவ குடும்பத்தினர். கணவனை இழந்த மனைவிகளும், தந்தையை இழந்த பிள்ளைகளும் கண்ணீருடன் அரசின் உதவிக்காக காத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் கதறல் சத்தம் ஆட்சியாளர்களின் காதுகளுக்கு எட்டவில்லை என மீனவ மக்கள் குமுறுகின்றனர். சொந்த மக்கள் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் போது, அவர்களோடு நிற்க மனமில்லாமல், எந்தவித கூச்சமும் இன்றி, முதலமைச்சர் விஜய், சொகுசான ஆடம்பர கல்யாணத்திற்கு நடிகை திரிஷா உடன் ஆடம்பரமாக சென்றதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் தி.மு.க.ஐ.டி.விங்கின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

வாக்குறுதி அளித்த வாய் எங்கே? மக்களுக்காக ஓடோடி வருவேன் என்ற விஜய் எங்கே?

உங்களுக்கு ஒன்று என்றால் உங்கள் வீட்டில் ஒருவனாக இந்த விஜய் வந்து நிப்பான் என்று தேர்தல் பிரச்சாரத்தின் போது மேடைக்கு மேடை முழங்கிய அந்தப் போலி வாய்கள் இப்போது எங்கே போயின?

கேவலம் சில ஓட்டுகளுக்காகவும், அதிகாரப் பீடத்திற்காகவும் மக்களை ஏமாற்றி, நாடகமாடி பதவி நாற்காலியில் போய் அமர்ந்த பிறகு இந்த விஜய் இப்போது எங்கே போய் நிற்கிறார்?

கடல் நடுவே புயலில் சிக்கி, வாழ்வாதாரத்தை இழந்து, தம் சொந்தங்களின் உயிரைப் பறிகொடுத்து அனாதையாய் நிற்கிறார்களே எங்கள் மீனவ மக்கள், அவர்களின் கதறல் சத்தம் உங்கள் ஆடம்பரக் காதுகளுக்கு எட்டவில்லையா? சொந்த மக்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் போது, அவர்களோடு நிற்க மனமில்லாமல், எந்தவிதக் கூச்சமும் இன்றி சொகுசான ஆடம்பரக் கல்யாணத்திற்கு ஆடம்பரமாகச் செல்கிறீர்கள், இதுதான் நீங்கள் சொன்ன வீட்டுப் பிள்ளையா?

விஜய் அவர்களே புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்ட உங்களிடம் கேட்கிறோம், உங்கள் சொந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு இப்படி ஒரு கொடூர அசம்பாவிதம் நடந்திருந்தால், அதை மறந்துவிட்டு இப்படித்தான் ஆட்டமும் பாட்டமுமாகச் சொகுசுக் கல்யாணத்திற்குப் போவீர்களா?

உங்கள் ஒவ்வொரு வீட்டிலும் விஜய் இருக்கிறான் என்று கூசாமல் பொய் சொன்னீர்களே, இன்று கதறித் துடிக்கும் பல மீனவக் குடும்பத்தின் கண்ணீர் குரல் கூட உங்கள் மனசாட்சியை உருக்கவில்லையா? வாக்குகளுக்காக இனிக்கப் பேசுவதும் பதவி வந்ததும் மக்கள் உயிருக்குப் போராடும் போது ஆடம்பர விழாக்களில் களிப்பதும் அப்பட்டமான சுயநல அரசியல்!

ஆபத்தில் ஓடி வராதவர் உங்கள் வீட்டுப் பிள்ளையும் இல்லை; தலைவனும் இல்லை! மக்களின் கண்ணீரை அலட்சியப்படுத்தும் இந்தப் போலித்தனத்திற்கு காலம் நிச்சயம் பாடம் கற்பிக்கும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

த.வெ.க. அரசின் செயல்பாடுகள் அதிருப்தி!

'மின்னம்பலம்' இணையதள தொலைக்காட்சியில் – பத்திரிக்கையாளர் துக்ளக் ரமேஷ் அடுக்கடுக்கான விமர்சனம்!

சென்னை, நவ.7

மின்னம்பலம் ஊடகம் ஏற்பாடு செய்த நிகழ்வில் பத்திரிகையாளர் துக்ளக் ரமேஷ் த.வெ.க. ஆட்சி குறித்து முன்வைத்த முக்கியமான விமர்சனங்கள் வருமாறு:-



1. முதலமைச்சரின் செயல்பாடுகள்

சட்டப்பேரவையில் முதலமைச்சர் அமர்ந்திருக்கிறார். ஆனால், எழுந்து பதில் சொல்வது பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன். உள்துறை முதலமைச்சரிடம் இருக்கிறதா அல்லது ராஜ் மோகனிடம் இருக்கிறதா?

"நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்ற சாதாரண பதிலைச் சொல்வதற்குக்கூட முதலமைச்சர் எழுந்திருக்கவில்லை.

2. சட்டப்பேரவை மரபுகள் மீறல்

ஒரு முதலமைச்சர் பேசும்போது எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து விளக்கம் கேட்க விரும்பினால், அவருக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும். அதுதான் சட்டப்பேரவையின் மரபு.

முதலமைச்சர் பேசி முடித்த பிறகும்கூட உதயநிதி ஸ்டாலினையோ, எடப்பாடி பழனிசாமியையோ ஏன் பேச அனுமதிக்கவில்லை? அவர்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதிலளிக்க முதலமைச்சர் தயாராக இல்லை என்பதுதான் காரணம்.

3. மக்கள் எதிர்பார்த்த மாற்றம் நிகழ்ந்துள்ளதா?

மாற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில்தான் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். ஆனால், அந்த மாற்றம் உண்மையில் நிகழ்ந்திருக்கிறதா என்பதுதான் நாம் சிந்திக்க வேண்டிய முக்கியமான கேள்வி.

4. ஆறு மாதங்களில் ரூ.20 ஆயிரம் கோடி கடன்

புதிதாக எந்தவொரு பெரிய வளர்ச்சித் திட்டத்தையும் செயல்படுத்தாமல், ஆறு மாதங்களுக்குள் ரூ.20 ஆயிரம் கோடி கடன் வாங்கியிருக்கிறது இந்த அரசு.

புதிய திட்டங்கள் இல்லை. புதிய ஒப்பந்தப்புள்ளிகள் இல்லை. இப்படி எந்தவொரு பெரிய வளர்ச்சிப் பணியும் நடைபெறாதபோது, அரசுக்கு இவ்வளவு பெரிய நிதிச்செலவினம் எங்கிருந்து வருகிறது?

5. சட்டம் ஒழுங்கு சீர்குலைவு

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலை பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. கொலைகள் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. சென்னை அடையாறு இந்திரா நகர் பகுதியில் மட்டும் மூன்று கொலைகள் நடந்துள்ளன.

பிணையில் வெளியே வருபவர்களைக் காவல் நிலையங்களுக்கு அருகிலேயே கொலை செய்கிறார்கள்.

மின்வெட்டு, அரிவாள் வெட்டு என்று தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் முன்வைத்த விமர்சனம் தான் இன்று தமிழ்நாட்டின் யதார்த்த நிலையாக இருக்கிறது.

6. பெண்கள் பாதுகாப்பு

பெண்களுக்கு எதிரான குற்றங்களை ஒருபோதும் சகித்துக்கொள்ள மாட்டேன் என்று முதலமைச்சர் கூறினார். ஆனால், சில குற்றச் சம்பவங்களில் குற்றஞ்சாட்டப் பட்டவர்களே தவெகவைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

7. அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை இழுக்க முயற்சி

சட்டப்பேரவையில் 118 என்ற பெரும்பான்மையை 120 ஆக உயர்த்த வேண்டும் என்பதற்காக அதிமுகவினருடன் பேரம் பேசும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அதிமுகவிலிருந்து எத்தனை சட்டமன்ற உறுப்பினர்களைத் தங்கள் பக்கம் இழுக்க முடியும், அந்தக் கட்சிக்குள் ஒரு அணியை உடைக்க முடியுமா என்ற முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

8. சமூக வலைத்தளப் பதிவுகளுக்காக கைது

சமூக வலைதளங்களில் யார் என்ன பதிவு போட்டாலும், அவர்களை நள்ளிரவிலும் அதிகாலையிலும் கைது செய்கிறார்கள். அந்தப் பதிவை உண்மையில் அவர்தான் வெளியிட்டாரா என்பதைக்கூட உறுதிப்படுத்தாமல் கைது நடவடிக்கை எடுக்கிறார்கள். அண்மையில் நடைபெற்ற சம்பவமே இதற்கு உதாரணம்.

9. முக்கியப் பொறுப்புகளில் ஊழலுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள்

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் ஊழலுக்கு உடந்தையாக இருந்த சில ஐஏஎஸ் அதிகாரிகள், தற்போதைய அரசிலும் மிக முக்கியமான நிர்வாகப் பொறுப்புகளில் இருக்கிறார்கள்.

10. தி.மு.க.வுக்கான இஸ்லாமியர்களின் ஆதரவு

தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களில் கணிசமான பகுதியினர் இன்றைக்கும் திமுகவைத்தான் ஆதரிக்கிறார்கள். வருகின்ற தேர்தலிலும் திமுகவுக்கான அவர்களது ஆதரவு தொடரும்.

இவ்வாறு துக்ளக் ரமேஷ் அடுக்கடுக்கான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

இடைத்தேர்தல் இன்னும் அறிவிக்கப்படாத நிலையில்; இப்போதே பணப்பட்டுவாடா, இதுதான் தூய ஆட்சியா?

முதலமைச்சர் விஜய்யின் புதுக்கோட்டை விசிட் ஒரு பெயிலியர் விசிட்!

முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

சென்னை, நவ.7-

இடைத்தேர்தல் இன்னும் அறிவிக்கப்படாத நிலையில்; இப்போதே பணப்பட்டுவாடா, இதுதான் தூய ஆட்சியா? என்று முன்னாள் அமைச்சர் எஸ். ரகுபதி செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார்.



இதுகுறித்து அவரது பேட்டி வருமாறு:

தமிழ்நாடு முதல்வர் விஜய் Bro அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை புரிந்தார். நிறைய புதிய திட்டங்கள் வரும் என புதுக்கோட்டை மக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனா ஜோசியர் சொன்னதால ஏற்கனவே ஏற்பாடு செய்த பெரிய இடத்தை விட்டுவிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. எந்த புதிய திட்டங்களும் அறிவிக்காமல் எதுவும் பேசாமல் அமைதியாக சென்றுவிட்டார். முதல்வர் நிகழ்ச்சிக்கு மாணவர்கள் வரவழைக்க வேண்டும் என்பதற்காக மகளிர் கல்லூரி செமஸ்டர் தேர்வை தள்ளிவைத்தனர்.

அடுத்ததாக புதிய பேருந்து நிலையத்தைத் திறக்கப் போனார். சரி, திறந்த உடனே நிறைய புதிய வழித்தடங்களிலே புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்குப் பயன் தரும் வகையிலே பேருந்துகள் இயக்கப்படும் என எல்லா மக்களும் ஆவலோடு காத்திருந்தாங்க. அங்கேயும் பெருத்த ஏமாற்றம். நலத்திட்ட உதவிகள் வழங்குகிற நிகழ்ச்சியிலும் ஏமாற்றம். புதிய வழித்தடங்கள் தொடங்குவார் என்று எதிர்பார்த்ததிலும் ஏமாற்றம்.

புதுக்கோட்டை மாவட்டத்துக்கு வாரார்னு 10 கோடி ரூபாய் செலவு செய்து ஒரு 45 கிலோ மீட்டருக்கு பேரிகார்டு கட்டி பொதுமக்களுடைய பணம் விரயமானதும், நிகழ்ச்சி நடக்காத இடத்தில பிரமாண்டமான பந்தல் போட்டதும் தான். இதைத் தவிர வேறு எந்தவிதமான சம்பவங்களும் புதுக்கோட்டையில் நடக்கல. எனவே அந்த புதுக் கோட்டை விசிட் என்பது பெயிலியரான விசிட் மட்டுமல்லாமல், அந்த மாவட்ட மக்களை ஏமாற்றிய ஒரு விசிட்டாகும்.

அடுத்ததாக விராலிமலை தேர்தலுக்காக அவர் வரல என்று சொல்றார். ஆனால் விராலிமலையில் தேர்தல் தேதி அறிவிக்கல. வேட்பாளர் அறிவிக்கல. யார் நிக்கப் போறாங்கறதும் தெரியாது. ஆனால் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் தீபாவளின்னு சொல்லி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் எவர்சில்வர் பெரிய பாத்திரம், அதுல வந்து ஸ்வீட் பாக்ஸ், ரசகுல்லா டின்னு இதெல்லாம் வச்சு வீட்டுக்கு வீடு கொடுத்துள்ளார். ஒரு வீட்டுக்கு ரூ.2000 மதிப்புள்ள பொருட்களை முதல் கட்டமாக விநியோகிக்கத் துவங்கி இருக்கிறார்.

இதுதான் தூய்மையான ஆட்சி. மக்களுக்கு எதுவுமே நாங்க ஓட்டுக்கு கொடுக்க மாட்டோம், ஆனா மக்கள் எங்களுக்கு ஓட்டு போடுவாங்கன்னு சொல்ற தூய்மையான ஆட்சியிலே விஜயபாஸ்கர் 90,000 குடும்ப அட்டைதாரர்களுக்கும் வீடு தவறாமல் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அத தவிர மற்றவங்களுக்கு எல்லாம் ரொக்கமாக பணம் கொடுத்து கொண்டிருக்கிறார். இப்ப எப்ப தேர்தல் வரப்போகுதோ, இப்பவே பட்டுவாடா ஆரம்பிச்சிட்டாங்கன்னா எத்தனை கோடியை அங்கே கொட்டப் போகிறார்கள் என்பதை பார்க்க வேண்டும்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு ஒரு பதம் என் பார்கள். எனவேதான் விராலிமலையை இங்கே உங்களுக்கு நான் உதாரணமாக சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே விராலிமலையை தேர்தலுக்காக அவங்க வேலை செய்யலை என்று சொன்னாலும், இப்ப பணம் கொடுக்க ஆரம்பிச்சிட்டாங்க. பொருள் கொடுக்க ஆரம்பிச்சிட்டாங்க.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு எந்த திட்டங்களையும் அறிவிக்காமல் ஒரு முதலமைச்சர் வந்து சென்றிருக்கிறார்.

செய்தியாளர் கேள்விக்கு பதில்

விலைவாசி உயர்வ கட்டுப்படுத்த முடியாமல் இந்த அரசு தடுமாறுகிறது. மின்கட்டண உயர்வு தடுமாறுகிறது. பால் கிடைக்காமல் தடுமாறது, கிடைச்சாலும் விலை ஜாஸ்தியா கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். தீபாவளியை முன்னிட்டு எல்லா பொருளும் விலை உயர்ந்துவிட்டது. ஆனால் கடந்த ஆண்டு தீபாவளியை பொதுமக்கள் மகிழ்ச்சியாக கொண்டாடினார்கள். இந்த ஆண்டு தீபாவளிக்கு எல்லாமே விலையேறி இருக்கிறதே தவிர, மக்களிடத்திலே வாங்கும் சக்தியும் கிடையாது, மகிழ்ச்சியும் கிடையாது.

செய்தியாளர் கேள்விக்கு பதில்

பேருந்து நிலையத்தைப் பொறுத்தவரைக்கும் அது அன்னைக்கு திறப்பு விழா நிகழ்ச்சின்னு சொல்லி எல்லாரையுமே கடைகளை அடைக்க சொல்லி சொல்லிட்டாங்க. அந்த பகுதியில் இருக்கக்கூடியவங்க பயந்து அடைச்சிட்டாங்க. சில பேர் மிரட்டலுக்கு அஞ்சி, காவல்துறை சொன்னாங்கங்கறதுக்காக அடச்சிருக்காங்க.

முதல் நாள் நாங்க பார்ட்டி ஆபீஸ்ல வந்து இனிப்பு வழங்குவதற்காக ஏற்பாடு செய்த பொழுது அந்த ஸ்வீட்டையே தூக்கிட்டு போனது காவல் துறை. எதுக்கு பாதுகாப்பு கொடுக்கிறாங்களோ இல்லையோ, முதலமைச்சர் வரப்போகிறார், ஒரு கட்டிடத்தை திறக்க போகிறார் என்றால் அது திராவிட மாடல் ஆட்சியிலே எங்களுடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்த திட்டங்கள் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்திற்கு முன்னாலே நாங்கள் இனிப்பு வழங்குவதற்கு செய்த ஏற்பாடுகளை கூட தடுத்து அந்த ஸ்வீட் தட்டு எல்லாம் தூக்கிட்டு போயிட்டாங்க. இந்த இனிப்பை எல்லாம் பிடுங்கிட்டு போற அளவுக்கு ஒரு மோசமான நிலைமையிலே புதுக்கோட்டை மாவட்டத்தில் நடந்து கொண்டார்கள்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.



ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட முன்னாள் அவைத் தலைவரும் முன்னாள் பொதுக்குழு உறுப்பினரும் நகர மன்ற முன்னாள் துணைத் தலைவருமான மிசா அ. அப்துல் சமது அண்மையில் மறைந்தார். பட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு நேரில் சென்று அப்துல் சமதுவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தாரிடம் விசாரித்தார். இதில் மாவட்டச் செயலாளர்கள் துரை. சந்திரசேகரன் டி . பழனிவேலு.நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி. சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணாதுரை.நகர செயலாளர் எஸ்.ஆர்.எம். செந்தில் குமார், நகர் மன்ற தலைவர் எஸ்.சண்முகப்பிரியா, ஒன்றிய செயலாளர்கள் மதுக்கூர் டி. மெய்ய நாதன், பா.ராமநாதன், தலைமை கழக பேச்சாளர் ந.மணிமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மெட்ரோ ரயிலில் இருப்பது போன்று அனைத்து ரயில்களிலும் அடுத்த ரயில் நிலையம் பற்றிய

டிஜிட்டல் அறிவிப்புப் பலகைகளை நிறுவ வேண்டும்!

ஒன்றிய அரசுக்கு – தயாநிதி மாறன் எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, நவ. 7-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி., அனைத்து ரயில்களிலும் டிஜிட்டல் காட்சிப் பலகைகள் (Digital Display Boards) மற்றும் பொது அறிவிப்பு அமைப்புகளை (Public Announcement Systems) நிறுவக் கோரி ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து ரயில்வேத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது :-

இந்திய ரயில்களில் டிஜிட்டல் காட்சிப் பலகைகள் மற்றும் பொது அறிவிப்பு அமைப்புகள் போதிய அளவில் இல்லாத நிலை, பயணிகளுக்குத் தொடர்ந்து பெரும் சிரமத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி வருவது குறித்து கழகத் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தற்போது, பெரும்பாலான ரயில்களில், ரயில் புறப்படும் இடம், இடைப்பட்ட நிலையங்கள் மற்றும் சேருமிடம் குறித்த அத்தியாவசியத் தகவல்களைப் பயணிகளுக்குத் தெரிவிக்கும் வகையிலான செயல்பாட்டு டிஜிட்டல் காட்சிப் பலகைகளோ அல்லது பொது அறிவிப்பு அமைப்புகளோ இல்லை. 'சதாப்தி எக்ஸ்பிரஸ்' போன்ற முதன்மை ரயில்களில் கூட இத்தகைய அடிப்படை வசதிகள் இல்லை. 'வந்தே பாரத்' ரயில்களில் மட்டுமே அந்த வசதிகள் காணப்படுகின்றன.

ஏற்கனவே இத்தகைய வசதிகள் பொருத்தப்பட்டிருந்த சில ரயில்களில் கூட, தற்போது காட்சிப் பலகைகளும் அறிவிப்பு அமைப்புகளும் செயல்படாத நிலையில் உள்ளன. இதனால் இறங்குமிடம் பற்றிய குழப்பங்களுக்கு பயணிகள் ஆளாகின்றனர். அதுமட்டுமல்ல, இரவு நேரங்களில் இறங்கக்கூடிய பயணிகள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். ரயில் போகும் வேகத்திற்கு எந்த ரயில் நிலையத்தை கடக்கின்றோம் என்ற குழப்ப நிலையில் பயணிகள் பயணிக்கின்றனர். இது முறையான பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு இல்லாததையே உணர்த்துகிறது.

இத்தகைய வசதிகள் இல்லாதது பயணிகளுக்கு, குறிப்பாக முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், பெண்கள், குழந்தைகள் மற்றும் வழித்தடங்கள் தெரியாத பயணிகளுக்குப் பெரும் இன்னல்களை ஏற்படுத்துகிறது.

குறிப்பாக, நள்ளிரவு மற்றும் அதிகாலை நேரப் பயணங்களின்போது, தாங்கள் எந்த நிலையத்தில் இருக்கிறோம், அடுத்த நிறுத்தம் எது, ரயில் புறப்படும் நேரம் என்ன போன்ற முக்கியத் தகவல்கள் தெரியாமல் பயணிகள் மிகுந்த குழப்பத்திற்கும் சிரமத்திற்கும் ஆளாகின்றனர்.

எந்த வகுப்பில் பயணம் செய்தாலும் அல்லது எந்தவகை ரயிலாக இருந்தாலும், ஒவ்வொரு பயணியும் சரியான நேரத்தில் துல்லியமான பயணத் தகவல்களைப் பெற உரிமை உள்ளது.



இது தொடர்பாக, ரயில்வே அமைச்சகத்தை நான் வலியுறுத்துவது :-

மெயில், எக்ஸ்பிரஸ், சூப்பர் ஃபாஸ்ட், சதாப்தி மற்றும் பிற முதன்மை ரயில்கள் உட்பட அனைத்துப் பயணிகள் ரயில்களிலும் டிஜிட்டல் காட்சிப் பலகைகள் மற்றும் தானியங்கி பொது அறிவிப்பு அமைப்புகள், முழுமையாக நிறுவப்பட வேண்டும்.

ரயில் புறப்படும் இடம், இடைப்பட்ட நிலையங்கள் மற்றும் சேருமிடங்களில், ரயில் புறப்பாடு, வருகை, அடுத்தடுத்த நிலையங்கள், திட்டமிடப்பட்ட நிறுத்தங்கள் மற்றும் காலதாமதம் குறித்த நிகழ்நேர அறிவிப்புகள் மற்றும் காட்சித் தகவல்களை வழங்க வேண்டும்.

தற்போது ரயில்களில் உள்ள காட்சிப் பலகைகள் மற்றும் அறிவிப்பு அமைப்புகள் குறித்து உடனடியாக தணிக்கை செய்து, செயல்படாத அனைத்து உபகரணங்களையும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரிசெய்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

இந்த வசதிகள் அனைத்தும் ரயிலின் சேவை காலம் முழுவதும் தொடர்ந்து செயல்படுவதை உறுதிசெய்ய, முறையான பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு நடைமுறையை ஏற்படுத்த வேண்டும்.

இந்த வசதிகள், அனைத்து மொழிகளிலும், குறிப்பாக அந்தந்த மாநிலத்தின் மொழியிலும் கிடைக்கச்செய்ய வேண்டும். இந்த வசதிகளை ஒட்டுமொத்த பயணிகள் ரயில் வலைதளங்களிலும் செயல்படுத்துவதற்காக, காலக்கெடுவுடன் கூடிய விரிவான செயல் திட்டத்தை உருவாக்குமாறு அமைச்சகத்திற்கு நீங்கள் அறிவுறுத்த வேண்டும் என்றும், இதற்கான முன்மொழியப்பட்ட கால அட்டவணை மற்றும் நிதி ஒதுக்கீடு குறித்த விவரங்களை தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பயணிகளுக்கான அடிப்படைத் தகவல்கள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான வசதிகள் என்பவை, சில குறிப்பிட்ட உயர்தர ரயில்களில் மட்டுமே கிடைக்கக்கூடிய ஆடம்பர வசதிகளாகக் கருதாமல் அவை, ஒவ்வொரு ரயில் பயணியும் பெறக்கூடிய அத்தியாவசிய வசதிகளாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் வலியுறுத்தி உள்ளார்.

ஓட்டுநர்கள் தேவை !

முரசொலி அலுவலகத்தில் ஜீப், வேன் மற்றும் எலக்ட்ரிக் ஆட்டோ இயக்குவதற்கு முன்னனுபவம், உரிய கல்விச் சான்று, ஓட்டுநர் உரிமம் மற்றும் பணியின் அனுபவச் சான்று இத்தனையும் உள்ளவர்கள் பகல் மற்றும் இரவுப் பணிக்கு சுழற்சி முறையில் பணியாற்றிட கீழ்க்கண்ட முகவரியில் (ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து) அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் நேரில் அணுகவும்.

நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-
பொதுமேலாளர்
முரசொலி – நாளிதழ்
180, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044– 45849900